**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.65/2024 – PW-6**

| | |
|---|---|
| Name | திரு.நீலமேகம் |
| Husband/Father Name | ராமு |
| Village /Area | சிறுவளையம் |
| Taluk | நெமிலி |
| Occupation | தனியார் நிறுவன ஊழியர் |
| Age | 32 |
| Religion | இந்து |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 01.08.2025.

**(எதிரி ஆஜர்)**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். 10.07.2021 அன்று இரவு 10.45 மணிக்கு நான் உறங்கிக்கொண்டிருந்த போது என்னுடைய மனைவி பக்கத்து வீட்டில் கத்துகிறார்கள் சென்று பாருங்கள் என்று கூறினார். சென்று பார்த்த உடன் கனிமொழி ரோட்டில் விழுந்து என்னுடைய குழந்தையை காப்பாற்றுங்கள் என்று அழுதுக்கொண்டிருந்தார். பிறகு நான் இருசக்கர வாகனத்தை எடுத்து கொண்டு என்னுடன் ராம் குமார் என்பவரம் சேர்ந்து புதுப்பட்டு மருத்துவமனைக்கு சென்றோம். மருத்துவனையில் செவிலியர் குழந்தையை பார்த்து விட்டு வாலாஜா அரசு மருத்துவமனைக்கு எடுத்து செல்லுமாறு கூறினார்கள். நாங்கள் வாலாஜா அரசு மருத்துவனையில் குழந்தையை சிகிச்சைக்கா சேர்த்தோம். மருத்துவர் குழந்தையை பரிசோதித்து குழந்தை இறந்து விட்டதாக கூறினார். குழந்தையின் பிரேத விசாரணையில் பானாவரம் காவல் ஆய்வாளர் என்னை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :</u>**

வாலாஜா மருத்துவமனைக்கு நானும் ராம்குமார் எதிரியும் கனிமொழியும் சென்றோம். அப்போது இரவு சுமார் 11.00 மணி இருக்கும். அங்கு போலீசார் வந்தார் அவர் என்னை சம்பவம் குறித்து விசாரித்தார். முதலில் போலீசார் குழந்தை எப்படி இறந்தது என்று என்னை தான் கேட்டார். நான் மருத்துவமனைக்கு அழைத்து வந்த விவரத்தை மட்டும் கூறினேன். போலீசார் அன்றிறவே புகார் தாரர் வீட்டிற்கு வந்து விட்டனார். 4, 5 போலீசார் இருந்தார்கள் அதில் உதவி ஆய்வாளர் 2 பேர். என்னையும் ராம்குமாரையும் புகார் தார் வீட்டில் உள்ள அனைவரையும் விடியற்காலை 05.00 மணிக்கு தனித்தனியே விசாரித்தார்கள்.

**(ஒம்./–) திருமதி.கே.எஸ்.ஜெயமங்களம்,**
**இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,**
**அரக்கோணம்.**